28.06.2016

தினமணி

# இன்றைய வேளாண் செய்திகள்

## கோபி அருகே வாழை சாகுபடி கருத்தரங்கு

கோபி அருகே அளுக்குளி வேளாண் குளிர்பதனக் கிடங்கில், வாழை சாகுபடி மற்றும் குளிர்பதனக் கிடங்குகள் பயன்பாட்டின் விழிப்புணர்வுக் கருத்தரங்கம் சனிக்கிழமை தொடங்கியது.

ஈரோடு மாவட்ட தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை சார்பில் நடைபெற்ற இவ்விழாவுக்கு, மாவட்ட ஆட்சியர் எஸ்.பிரபாகர் தலைமை வகித்தார். கோபி சட்டப்பேரவை உறுப்பினர் கே.ஏ.செங்கோட்டையன், திருப்பூர் மக்களவை உறுப்பினர் சத்யபாமா ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஈரோடு தோட்டக்கலை துணை இயக்குநர் பி.தமிழ்செல்வி வரவேற்றார்.

சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கே.சி.கருப்பணன் கருத்தரங்கை தொடக்கி வைத்துப் பேசியதாவது:

விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளை பொருள்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும் என்பதற்காக சிறு, குறு விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசனம் அமைக்க 100 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. பிற விவசாயிகளுக்கு 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. முதல்வர் ஜெயலலிதா தேர்தல் வாக்குறுதியான சிறு, குறு விவசாயிகள் வாங்கிய பயிர்க் கடன்களை தள்ளுபடி செய்வதாக அறிவித்தார். அதன்படி, மாநிலம் முழுவதும் உள்ள விவசாயிகளுக்கு ரூ. 5,360 கோடி விவசாய பயிர்க் கடன்களை தள்ளுபடி செய்துள்ளார். இதில், ஈரோடு மாவட்டத்தில் மட்டும் ரூ. 320.81 கோடி பயிர்க் கடன் தள்ளுபடி செய்யப்பட்டு, 54,640 விவசாயிகள் பயன்பெறுகிறார்கள். இது தமிழக கடன் தள்ளுபடியில் 18 சதவீதம் ஆகும். இங்குள்ள கிடங்கில் விவசாயிகள் தங்களின் விளை பொருள்களை சேமித்து வைத்து, கூடுதல்

விலை கிடைக்கும்போது விற்பனை செய்தால் லாபம் பெறலாம். இந்த வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இங்கு ஜூலை 5-ஆம் தேதி முதல் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் வாழைப்பழ தார் ஏலம் விட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

கோபி சட்டப்பேரவை உறுப்பினர் கே.ஏ.செங்கோட்டையன் பேசுகையில், தமிழக முதல்வர் ஜெயலலிதா திருச்சி ஸ்ரீரங்கத்துக்கு அடுத்தபடியாக 1,000 டன் குளிர்பதனக் கிடங்கை கோபி தொகுதிக்கு வழங்கி உள்ளார் என்றார்.

இதில், சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஈரோடு (கிழக்கு) தென்னரசு, பவானிசாகர் ஈஸ்வரன், அந்தியூர் ராஜாகிருஷ்ணன், கோபி நகர அதிமுக செயலாளர் சையத்புடான்சா, வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை மற்றும் மலைப் பயிர்கள் துறை அதிகாரிகள், விவசாயிகள் கலந்துகொண்டனர்.

## கிருஷ்ணகிரியில் ஜூன் 30-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

கிருஷ்ணகிரியில் வரும் 30-ஆம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் வரும் 30 -ஆம் தேதி காலை 11 மணிக்கு விவசாயிகள் குறைதீர் கூட்டம் மாவட்ட ஆட்சியர் சி.கதிரவன் தலைமையில் நடைபெறுகிறது. விவசாயிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்று தங்கள் குறைகளைத் தெரிவித்து நிவர்த்தி செய்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வரும் 30-ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம்

வரும் 30-ம் தேதி காலை 11 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 2016-ம் ஆண்டு ஜூன் மாதத்திற்கான விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் நடைபெற உள்ளது. முதுநிலை மாவட்ட ஆட்சியர் காகர்லாஉஷா தலைமையில் நடைபெற உள்ள கூட்டத்தில் மாவட்ட விவசாயிகள், விவசாய சங்க உறுப்பினர்கள் பங்கேற்று தங்களது

விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த மனுக்களை வழங்கித் தீர்வு காணலாம்.

## பாரம்பரிய விதை பாதுகாப்பு, பரவலாக்கல் கருத்தரங்குவிவசாயிகளுக்கு 35 வகையான பாரம்பரிய விதைநெல், சிறுதானிய விதைகள்

புதுக்கோட்டை அருகே மேலூர் தாசன் இயற்கை விவசாய பண்ணையில் பாரம்பரிய விதைகள் பாதுகாப்பு, பரவலாக்கம் குறித்த கருத்தரங்கம், பாரம்பரிய விதைத் திருவிழா திங்கள்கிழமை நடைபெற்றது.

ரோஸ், நபார்டு வங்கி இணைந்து நடத்திய கருத்தரங்கை, மாவட்ட வருவாய் அலுவலர் சு. மாரிமுத்து பாரம்பரிய முறைப்படி விதைத்தூவி தொடங்கி வைத்தார்.

இதில், மாநில வேளாண் வணிகத் துறை இணை இயக்குநர் இளங்கோவன் பங்கேற்று பேசுகையில், பாரம்பரிய நெல் ரகங்களின் மருத்துவ குணங்கள், சத்துகளை நுகர்வோர் மத்தியில் பரவச் செய்து, விவசாயிகளுக்கு பாரம்பரிய நெல்களுக்கான சந்தை வாய்ப்பை புதுக்கோட்டை இயற்கை விவசாய உற்பத்தியாளர் நிறுவனம் மூலம் விரிவுபடுத்தி, விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும், உயிர்ச் சூழலையும் பாதுகாக்க வேண்டும் என்றார்.

நபார்டு மாவட்ட வளர்ச்சி மேலாளர் எஸ். சோமசுந்தரம் பேசுகையில், புதுக்கோட்டை மாவட்டத்தில் மருத்துவ குணமுள்ள பாரம்பரிய நெல் ரகங்களைப் பாதுகாத்து, பரவலாக்கம் செய்வதை, கடந்த 7 ஆண்டுகளாக ரோஸ் நிறுவனத்துடன் இணைந்து செய்து வருகிறோம். இப்பாரம்பரிய நெல் ரகங்கள், சிறுதானியங்கள் ஆகியவற்றிலிருந்து உணவுப்பண்டங்கள் தயாரிக்க பெண்களுக்கு பயிற்சி அளிப்பதோடு, விற்பனை வாய்ப்பையும் ஏற்படுத்தி நிலைத்த வாழ்வாதாரத்தை உறுதிசெய்ய உள்ளோம் என்றார்.

சுற்றுச்சூழல் ஆர்வலரும், இயற்கை விவசாயியுமான மதுரை பாமயன் பேசுகையில், பாரம்பரிய ரகங்கள் என்றாலே, மோட்டாவாகத்தான் இருக்கும் என்பதில்லை. பாசுமதி, சீரகச்சம்பா போன்ற சன்னமான பாரம்பரிய நெல் ரகங்களும் உள்ளன. ஒவ்வொரு விவசாயியும், 2 அல்லது 3 ரகங்களை தொடர்ந்து பயிரிட்டு பாதுகாத்து வரவேண்டும்.

குறைந்த நீரில் நோய்த் தாக்குதல் இல்லாமல், மண்ணுக்கும், மனிதருக்கும், கால்நடைகளுக்கும் உணவளிக்கக் கூடிய நமது பாரம்பரிய விதைகளைப் பயிரிட்டு, பயன்படுத்தி நோய்களின்றி வாழ்ந்து, ஆரோக்கியமான சத்துள்ள சமுதாயத்தை உருவாக்க அனைவரும் பாடுபட வேண்டும் என்றார்.

புதுக்கோட்டை இயற்கை விவசாய உற்பத்தியாளர் நிறுவனத்தின் இயக்குநர் ஜி.எஸ். தனபதி பேசுகையில், இதுபோன்ற பாரம்பரிய விதைத் திருவிழாக்கள் கிராமங்கள்தோறும் உள்ள 70 உற்பத்தியாளர் குழுக்கள், உழவர்மன்றங்கள் மூலம் நடத்தப்பட வேண்டும். பாரம்பரிய நெல் ரகங்களில் உள்ள மருத்துவ குணங்கள், சத்துக்கள் குறித்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். புதுக்கோட்டையில் பாரம்பரிய விதைப் பாதுகாப்பு மையம் ஏற்படுத்தப்பட வேண்டும். பாரம்பரிய விவசாயத்தில் புதுக்கோட்டையை ஒரு முன்னோடி மாவட்டமாக உருவாக்க வேண்டும் என்றார்.

இதில், வேளாண் இணை இயக்குநர் என். அண்ணாமலை, வேளாண் வணிகத் துறை துணை இயக்குநர் சிங்காரம், மேலூர் ஊராட்சித் தலைவர் மல்லிகா சுப்பிரமணியன், இயற்கை விவசாயிகள் சி. அப்பாவு பாலாண்டார், ஜீவானந்தம், விஜயா ஆகியோர் பங்கேற்று விவசாயிகளுக்கு தேவையான இயற்கை விவசாய யுக்திகள் குறித்து விளக்கினர். ரோஸ் நிறுவன இயக்குநர் ஏ. ஆதப்பன் வரவேற்றார். மேலூர் இயற்கை விவசாயி ரகுபதி நன்றி கூறினார்.

இக்கருத்தரங்களில், 700-க்கும் அதிகமான விவசாயிகள், உழவர் மன்ற உறுப்பினர்கள், ஊராட்சித் தலைவர்கள், புதுக்கோட்டை, சிவகங்கை உள்ளிட்ட 5 மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றனர்.

இவர்கள் அனைவருக்கும், மாப்பிள்ளைச்சம்பா, பூங்கார், கவுனி, மிளகி, பொம்மி, நவரா உள்ளிட்ட 35 வகையான பாரம்பரிய நெல் ரகங்களும், சிறுதானியங்களான கேழ்வரகு, குதிரைவாலி, சாமை, திணை, வரகு, கம்பு போன்ற விதைகளும் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில், பாரம்பரிய விதைகள், பாரம்பரிய விவசாய யுக்திகள், இயற்கை இடுபொருட்கள் குறித்த கண்காட்சியும் நடைபெற்றது.

## நாகையில் ஜூன் 30-இல் நாட்டுக் கோழி வளர்ப்புப் பயிற்சி

நாகை கால்நடை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில், நாட்டுக் கோழி வளர்ப்புப் பயிற்சி ஜூன் 30- ஆம் தேதி நடைபெறும் என பயிற்சி மையத் தலைவர் பி. சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

நாகை கால்நடை மருத்துவமனை வளாகத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில், நாட்டுக் கோழி வளர்ப்புப் பயிற்சி ஜூன் 30-ஆம் தேதி காலை 10 மணிக்குத் தொடங்கி நடைபெறவுள்ளது.

பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர் பயிற்சி மையத்தை நேரில் அணுகலாம் அல்லது 04365- 247123 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என அவர் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## விவசாயிகளுக்கான விழிப்புணர்வுப் பெருவிழா

விவசாயிகளுக்கான விழிப்புணர்வுப் பெருவிழா, திண்டிவனத்தில் திங்கள் கிழமை நடைபெற்றது.

விழாவில் சட்டத்துறை அமைச்சர் சி.வி.சண்முகம் கலந்து கொண்டு வேளாண் பொருள்கள் விற்பனை நிலையத்தைத் திறந்து வைத்து, தலைமை உரையாற்றினார்.

தொடர்ந்து "சிறுதானிய பயிர் சாகுபடி' என்ற நூல் வெளியிடப்பட்டது.

இதில் பிரதமர் பயிர் காப்பீட்டுத் திட்டம் மற்றும் பருவநிலை மாற்றத்துக்கு உகந்த சிறுதானிய பயிர் சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் சா.ஷீபா, விழுப்புரம் மாவட்ட ஆட்சியர்

எம்.லட்சுமி ஆகியோர் சிறப்புரையாற்றனர். இதில் நாடாளுமன்ற உறுப்பினர் சு.ராஜேந்திரன், சட்டப்பேரவை உறுப்பினர் பி.சீத்தாபதி சொக்கலிங்கம், எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையத் தலைவர்

ர.வைத்தியநாதன், வேளாண்மை இணை இயக்குநர் ஆ.ரத்தினசபாபதி, கால்நடைத் துறை துணை இயக்குநர் மரு.தா.ராமமூர்த்தி, நபார்டு உதவிப் பொது மேலாளர் விக்ரமன், தொழில்நுட்ப வல்லுநர் வை.ராதாகிருஷ்ணன், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்**

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம், வரும், 30ம் தேதி நடக்கிறது என, கலெக்டர் கதிரவன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில், வரும், 30ம் தேதி காலை, 11 மணிக்கு, விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடக்கிறது. கூட்டத்தில், கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் பங்கேற்று, தங்கள் குறைகளை தெரிவித்து நிவர்த்தி செய்து கொள்ளலாம். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

**தேயிலை ஏலத்தில் 92 சதவீதம் விற்பனை**

குன்னூர்: குன்னூரில் நடந்த தேயிலை ஏலத் தில், 92 சதவீத தேயிலை தூள் விற்பனையானது.

குன்னூரில் உள்ள ஏல மையத்தில் விற்பனை எண், 25க்கான ஏலம் நடந்தது. இதில், 11 லட்சத்து, 22 ஆயிரம் கிலோ தேயிலை தூள் இடம் பெற்றது. இந்த ஏலத்தில், 92 சதவீதம் விற்பனையானது. 'சிடிசி' ரகத்தில், உயர்ந்தபட்ச விலையாக, தேயிலை தூள் கிலோ, 217 ரூபாய்;ஆர்த்தோடெக்ஸ் ரகம், 261 ரூபாய் என, கிடைத்தது. இலை ரகத்தில் சாதாரண வகை, 84 ரூபாய் முதல், 86 ரூபாய் வரையும், தரமான

தேயிலை தூள், 100 ரூபாயில் இருந்து, 140 ரூபாய் வரையிலும் ஏலம் போனது.

டஸ்ட் ரகத்தின் சாதாரண வகை, 93 ரூபாயில் இருந்து, 95 ரூபாய் வரையிலும், தரமான தேயிலை தூள், 110 லிருந்து, 160 வரையிலும் ஏலம் விடப்பட்டது. மொத்தம், 9.98 கோடி ரூபாய்க்கு விற்பனையானது. 'பான் இந்தியா' திட்டத்தின் கீழ் நடந்த ஏலத்தில், நாடு முழுவதிலும் பல்வேறு பகுதிகளை சேர்ந்த வர்த்தகர்கள் பங்கேற்றனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## ஓமலூர் வட்டாரத்தில் அறுவடை தீவிரம் கம்பு மூட்டை ரூ.3000க்கு விற்பனை

ஓமலூர் : ஓமலூர் வட்டார கிராமங்களில் சுமார் 700 ஏக்கர் பரப்பில் கம்பு அறுவடை தொடங்கி நடைபெற்று வருகிறது. சந்தையில் ஒரு மூட்டை ரூ.3000 வரையிலும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. சேலம் மாவட்டம் ஓமலூர் மற்றும் சுற்றுப்புறபகுதிகளில்கடந்த பங்குனி மாத பட்டதில் சிறுதானிய பயிரான கம்பு விதைக்கப்பட்டது. ஓமலூர் வட்டாரத்தில் கோட்டைமாரியம்மன் கோயில், செட்டியபட்டி, காமலாபுரம், காடையாம்பட்டி வட்டாரத்தில் கணவாய்புதூர், தாராபுரம், டேனிஷ்பேட்டை, லோக்கூர், பொம்மியம்பட்டி, மோரூர் உட்பட 50க்கும் மேற்பட்ட பகுதிகளில் சிறு தானிய பயிரான கம்பை விதைக்க வேளாண்மைத்துறை அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டனர்.

மேலும், கம்பு விதைக்க முன்வரும் விவசாயிகளுக்கு போதுமான ஆலோசனைகளை வழங்கினர். இதன்படி, ஓமலூர் மற்றும் காடையாம்பட்டி சுற்று வட்டார கிராமங்களில் சுமார் 700 ஏக்கர் பரப்பில் கம்பு பயிரிடப்பட்டது. அவ்வப்போது பெய்து வந்த மழைக்கு நன்றாக

வளர்ந்த கம்பு அறுவடைக்கு வந்துள்ளது. கம்பு பூட்டைகள் நீளமாகவும், பெரியதாகவும், பருத்தும் நன்றாக வளர்ந்து அமோகமாக விளைந்துள்ளது.

குறைந்த செலவில் நல்ல விளைச்சலை கொடுத்துள்ளதால் விவசாயிகள் மகிச்சியுடன் அறுவடை பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். தற்போது, உணவு முறைகளின் மாற்றத்தால் மக்கள் பல்வேறு நோய் தாக்குதலுக்குள்ளாகி வருகின்றனர். சத்து குறைபாடுகள், கெட்ட கொழுப்புகள் அதிகரித்தல் போன்றவற்றில் இருந்து விடுபடவும், நோய் எதிர்ப்பு சக்தியை பெருக்கவும் சிறுதானியங்களை அதிக அளவில் உட்கொள்ள மருத்துவர்கள் அறிவுறுத்தி வருகின்றனர்.

இதனால், சிறு தானியங்கள் குறித்த விழிப்புணர்வு அதிகரித்துள்ளது.இதன் காரணமாக தற்போது சிறுதானிய உணவு தேவைகள் அதிகரித்துள்ள நிலையில் ஓமலூர் வட்டார பகுதியில் பல விவசாயிகள் கம்பு சிறு தானியத்தை பயிரிட்டு அறுவடை செய்து வருகின்றனர். 100 கிலோ மூட்டை ரூ.2500 முதல் ரூ.3000 ஆயிரம் வரையிலும் விலை போவதால் விவசாயிகள் மிகுந்த மகிழ்ச்சியில் உள்ளனர். இதனால், இரண்டாம் போகமாக மீண்டும் கம்பு பயிரையே விதைக்க தயாராகி வருகின்றனர்.

## கொங்கணாபுரத்தில் ரூ.35 லட்சத்திற்கு பருத்தி விற்பனை

இடைப்பாடி : சேலம் மாவட்டம் கொங்கணாபுரத்தில் நடைபெற்ற ஏலத்தில் ரூ.35 லட்சத்திற்கு பருத்தி விற்பனை செய்யப்பட்டது. சேலம் மாவட்டம் இடைப்பாடி அருகே கொங்கணாபுரத்தில் செயல்பட்டு வரும் திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று முன்தினம் பருத்தி ஏலம் நடைபெற்றது. இதில், தர்மபுரி, கிருஷ்ணகிரி, அவினாசி, சேலம், நாமக்கல் மற்றும் ஈரோடு உள்ளிட்ட பகுதிகளிலிருந்து விவசாயிகள் பருத்தி மூட்டைகளை விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர்.

பின்னர், நடைபெற்ற ஏலத்தில் பிடி ரக பருத்தி குவிண்டால் ரூ.4900

முதல் ரூ.5400 வரையிலும், டிசிஎச் ரகம் குவிண்டால் ரூ.6000 முதல் ரூ.6500 வரையிலும் விற்பனையாது. இதேபோல், வெள்ளை எள் கிலோ ரூ.69 முதல் ரூ.74.50 வரையிலும் ஏலம் போனது. ஆக மொத்தம் 1700 மூட்டை பருத்தி ரூ.35 லட்சத்திற்கும், 120 மூட்டை எள் ரூ.6 லட்சத்திற்கும் விற்பனையானது.

## பலா, கொய்யா செடிகள் விவசாயிகளுக்கு வினியோகம்

நாமக்கல் : கொல்லிமலை தோட்டக்கலை பண்ணையில் பலா, கொய்யா செடிகள் விவசாயிகளுக்கு வினியோகம் செய்யப்படுகிறது. இது குறித்து, நாமக்கல் மாவட்ட வேளாண்மைத்துறை வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு: நாமக்கல் மாவட்டத்தில் தோட்டக்கலைப் பயிர்கள் 35,000 ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதில், வாழை பயிர் 5,466, காய்கறி 22,293, வாசனை திரவியம் 4,005, மலைத் தோட்டப் பயிர்கள் 3,469, மலர் பயிர்கள் 347, மூலிகைப் பயிர்கள் 778 ஹெக்டேரிலும் சாகுபடி செய்யப்படுகிறது.

கொல்லிமலையில் செம்மேடு, படசோலை ஆகிய இரு இடங்களில் இயங்கி வரும் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் சில்வர் ஓக் 1,16,022, மிளகு 521, காப்பி 62,911, பலா 843, கொய்யா 268 ஆகிய நடவு செடிகள் விவசாயிகளுக்கு விநியோகிக்க தயாராக இருப்பில் உள்ளன. தேவைப்படும் விவசாயிகள் அங்குள்ள தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் அலுவலகத்தை அணுக வேண்டும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வத்தல்மலையில் சவுக்கு மரம் வளர்ப்பில் ஆர்வம் காட்டும் விவசாயிகள்

தர்மபுரி : வத்தல்மலையில் உள்ள தனியார் நிலங்களில் சவுக்கு மரம் வளர்ப்பதில் விசாயிகள் பெரிதும் ஆர்வம் காட்டி வருகின்றனர். தர்மபுரி மாவட்டம் வத்தல் மலையில் பால்சிலம்பு, பெரியூர், மண்ணாங்காடு, சின்னாங்காடு, ஒன்றியங்காடு, மன்னாங்குழி, நாய்க்கனூர், கொட்டலாங்காடு உள்ளிட்ட 7 கிராமங்கள் உள்ளன. இந்த கிராமங்களில் 3 ஆயிரம் பேர் வசிக்கின்றனர். வத்தல் மலையில் காபி,

செவந்தி பூ உள்ளிட்ட பூ வகைகள் மற்றும் சில்வர் ஓக் மரங்கள், தோட்டப்பயிர்கள், குச்சி கிழங்கு, சாமை, தினை, கேழ்வரகு போன்ற பயிர்கள் விளைவிக்கப்படுகின்றன.

இந்நிலையில் நாய்க்கனூர் கிராமம், பெரியூர் கிராமங்களில் சவுக்கு மரம் சுமார் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் விளைவிக்கப்படுகிறது. ஓராண்டில் சுமார் 20 அடி வளரும் சவுக்கு மரங்கள் அறுவடை செய்யப்பட்டு சேலம், வேலூர், திருவண்ணாமலை, கோயமுத்தூர் போன்ற பகுதிகளுக்கு லாரிகளில் மூலம் அனுப்பி வைக்கப்படுகிறது. சவுக்கு மரங்கள் குளிர் பகுதியில் விரைவாக வளரும் தன்மை உடையது என்பதால் வத்தல் மலையில் தனியார் நிலங்களில் சவுக்கு மரம் வளர்ப்பது அதிகரித்து வருகிறது.

இது குறித்து நாய்க்கனூர் கிராம விவசாயிகள் கூறும் போது, வத்தல்மலையில் காட்டுப்பன்றிகள் தொந்தரவு அதிகமாக உள்ளது. இதனால் பெரும்பாலான விவசாயிகள் தங்களது நிலங்களை விற்றுவிட்டு, தர்மபுரிக்கு சென்றுவிட்டனர். புதிதாக நிலம் வாங்கியவர்களும் சோளம், தினை, கம்பு போன்ற பயிர் விவசாயத்திற்கு பதில் சவுக்கு மரம் வளர்ப்பதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். 5 அடிக்கு ஒரு மரம் என நட்டு வைக்க வேண்டும். மரத்திற்கு தண்ணீர் விடுவது குறைவாக இருந்தால் போதுமானது, வேலிகள் அமைத்துவிட்டால் பராமரிப்பு தேவையில்லை.

காட்டு விலங்குகள் தொந்தரவும் இல்லை என்பதால் சவுக்கு மரம் வளர்ப்பது அதிகரிக்கிறது. ஓராண்டு முதல் சவுக்கு மரம் வெட்டப்படுகிறது. 3 முதல் 5 ஆண்டுகள் நன்கு வளர்ந்த மரங்கள் நல்ல விலை கிடைக்கிறது. இங்கு வளர்க்கப்படும் சவுக்குகள் பெரும்பாலும் கட்டுமானப்பணிகளுக்கே கொண்டு செல்லப்படுகிறது. பெங்களூர், சென்னையில் இருந்து மரவியாபாரிகள் இங்கு வந்து சவுக்கு மரங்களை வாங்கி செல்கின்றனர். இவ்வாறு விவசாயிகள் தெரிவித்தனர்.

**விலை குறைவு எதிரொலி கொப்பரைவரத்து பாதியாக குறைவு**

ஈரோடு, :கொப்பரை தேங்காய் விலை குறைந்து கொண்டு வருவதால் விற்பனைக்கு வரும் கொப்பரை வரத்து பாதியாக குறைய தொடங்கி உள்ளது. தமிழகத்தில் தேங்காய் மற்றும் கொப்பரை தேங்காய் விலை கடந்த 8 மாதங்களாக தொடர்ந்து விலை சரிந்து கொண்டே வருகிறது. பாமாயில் இறக்குமதி செய்யப்படுவதால் தான் இந்த விலை வீழ்ச்சி என்றும், பாமாயில் இறக்குமதிக்கு மத்திய அரசு தடை விதிக்க வேண்டும் என்றும் விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரத்திற்கு இரண்டு நாட்கள் கொப்பரை தேங்காய் ஏலம் நடைபெறுவது வழக்கமாகும். இந்த ஏலத்தில் ஈரோடு மாவட்டம் மட்டுமின்றி கோவை, திருப்பூர், சேலம், நாமக்கல், தர்மபுரி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் விவசாயிகள் தங்களது கொப்பரை தேங்காய் விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். தொடர்ந்து விலை வீழ்ச்சியடைந்து வருவதால் விற்பனைக்கு வரும் கொப்பரை வரத்து குறைய தொடங்கி உள்ளது.

கடந்த புதன்கிழமையன்று நடைபெற்ற கொப்பரை ஏலத்தில் 2 லட்சத்து 50 ஆயிரம் கிலோ வரத்து இருந்த நிலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஏலத்தில் 1 லட்சத்து 10 ஆயிரம் கிலோ மட்டுமே வரத்து இருந்தது. முதல் தரம் கொண்ட கொப்பரை கிலோ ரூ.51.15க்கும், இரண்டாம் தரம் கொப்பரை ரூ.38.80 முதல் ரூ.50.50க்கும் விற்பனையானது. வரத்து குறைந்திருந்த நிலையில் விலை உயரலாம் என்ற எதிர்பார்த்திருந்த விவசாயிகளுக்கு ஏமாற்றமளிக்கும் வகையில் விலையும் குறைந்திருந்தது. சராசரியாக கிலோ ஒன்றுக்கு 50 பைசா குறைந்திருந்தது. மொத்தம் ரூ.70 லட்சத்திற்கு விற்பனையானதாக அதிகாரிகள் கூறினர்.

## சேவூரில் நிலக்கடலை வரத்து குறைந்தது

அனுப்பர்பாளையம், ; அவிநாசி அருகே சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில், நேற்று நடைபெற்ற ஏலத்தின்போது சீசன் இல்லாததால் நிலக்கடலை வரத்து வெகுவாக குறைந்தது. இந்த வார ஏலத்துக்கு 46 மூட்டைகள் கொண்டு வரப்பட்டன. குவிண்டாலுக்கு முதல் ரக நிலக்கடலை ரூ.5,410 முதல் ரூ.6,090 வரையிலும், இரண்டாவது ரகம் ரூ.4,200 முதல் ரூ. 4,950 வரையிலும், மூன்றாம் ரகம் ரூ.4,000 முதல் ரூ.4,200 வரையிலும் ஏலம் கோரினர். மொத்தம் ரூ. ஒரு லட்சத்துக்கு ஏல வர்த்தகம் நடந்தது. இந்த ஏலத்தில் திருப்பூர், தாராபுரம், அவிநாசி, அன்னூர், புளியம்பட்டி, சேவூர், நம்பியூர், கோபி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 3 வியாபாரிகளும், 7 விவசாயிகளும் பங்கேற்றனர்.

## 661 ஏக்கரில் பாய் நாற்றங்கல் அமைக்கும் பணி நிறைவு

திருச்சி, : திருச்சி டெல்டா பகுதிகளில் குறுவை சாகுபடி சிறப்பு உதவித்திட்டம் நடைபெறும் 1,500 ஏக்கரில் 601 ஏக்கரில் இயந்திரம் மூலம் பாய் நாற்றங்கால் அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது.டெல்டா பகுதிகளில் நிலத்தடி நீர் ஆதாரமுள்ள பகுதிகளில் குழாய்கிணறு மற்றும் வடிமுனை குழாய் கொண்டு குறுவை நெற்பயிர் சாகுபடி செய்ய ரூ.88.55 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருச்சி மாவட்டத்தில் உள்ள டெல்டா வட்டாரங்களில் வடிமுனை குழாய் மூலம் குறுவை சாகுபடி செய்யவுள்ள விவசாயிகளுக்கு 1,500 ஏக்கரில் இயந்திர நெல் நடவு செய்ய இலக்கீடுகள் பெற்று, குறுவை அதிகம் பயிரிடப்படும் வட்டாரமான லால்குடியில் 1,230 ஏக்கர், முசிறியில் 150 ஏக்கர், திருவெறும்பூரில் 50, அந்தநல்லூர், மண்ணச்சநல்லூரில் தலா 25, புள்ளம்பாடியில் 20 ஏக்கர் பரப்பில் இயந்திரம் மூலம் நடவு செய்ய இலக்குகள் பிரித்தளிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 661 ஏக்கரில் இயந்திரம் மூலம் நடவு செய்ய பாய் நாற்றங்கால் அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. நெல் நடவு இயந்திரம் மூலம் நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கான இயந்திர நெல் நடவு பணிக்காகவும், அதற்குரிய பாய் மற்றும் தட்டு நாற்றுகளை தயார்

செய்யவும் ரூ.4,000 பின்னேற்பு மான்யமாக விவசாயிகளின் வங்கி கணக்கிற்கே நேரடியாக செலுத்தப்படுகிறது. எனவே இத்திட்டத்தை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என வேளாண்மை துறை இணை இயக்குனர் சந்திரசேகரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

## பயிர் காப்பீட்டு திட்ட விழிப்புணர்வு முகாம்

ஜீயபுரம், : புதுடெல்லி இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகம், பெங்களூரு வேளாண் தொழில்நுட்ப பயன்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், தமிழ்நாடு வேளாண் பல்கலையின் கீழ் செயல்படும் சிறுகமணி வேளாண் அறிவியல் நிலையம் மற்றும் கரும்பு ஆராய்ச்சி நிலையத்தில் பயிர் காப்பீட்டு திட்ட விழிப்புணர்வு முகாம், விவசாய கண்காட்சி நாளை (28ம் தேதி) காலை நடைபெற உள்ளது. வேளாண் பல்கலைக்கழக முதல்வர்கள், இயக்குநர்கள், வேளாண் விஞ்ஞானிகள், அதிகாரிகள், பயிர் காப்பீட்டு நிறுவன அலுவலர்கள் மற்றும் பல்வேறு துறைகளை சேர்ந்த அலுவலர்கள் கலந்து கொள்கின்றனர். பங்கேற்கின்றனர். விவசாயிகள் தவறாது கலந்து கொண்டு காப்பீடு தொடர்பான தங்களது அனைத்து சந்தேகங்களுக்கும் விளக்கம் கேட்டு அறிந்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விழிப்புணர்வு கருத்தரங்கில் அறிவுறுத்தல் குலைநோய் தாக்குதலை கட்டுப்படுத்துவது எப்படி? விவசாயிகளுக்கு ஆலோசனை

அரியலூர் : நவரை நெற்பயிரில் குலைநோய்தாக்குதலை விவசாயிகள் கட்டுப்படுத்துவது எவ்வாறு என சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர் ராஜாஜோஷ்லின் ஆலோசனை தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

அரியலூர் மாவட்டத்தில் சம்பா சாகுபடியை தொடர்ந்து தற்போது குறுவை மற்றும் நவரை நெற்பயிர்கள் தா.பழூர் பகுதியில்சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. ஒரு சில இடங்களில் அறுவடை பணி நடைப்பெற்று வருகிறது. தா.பழூர் பகுதியில் ஏனைய இடங்களில் நவரை நெற்பயிர்கள் பரவலாக பயிரிடப்பட்டு வளர்ந்த நிலையில் பசுமையாக தென்படுகிறது. இந்த தருணத்தில் நெற்பயிரில் குலை நோய் தாக்குதலை

கட்டுப்படுத்தாவிட்டால் விவசாயிகளுக்கு பெருத்த மகசூல் இழப்பு ஏற்படும். அதிகமாக தலைச்சத்து இடுதல், மேகம் சூழ்ந்த வானமூட்டம், தூறல், அதிகமான ஈரப்பதம் (93,-95 சதவீதம்), பனிக் குறைவான இரவு நேர வெப்பநிலை (20"சி)போன்ற சூழ்நிலை இந்நோய் பரவ காரணமாகும்.

இந்நோய் நாற்றங்காலில் தொடங்கி நடவு வயலில் கதிர்விடும் பருவம் வரை எல்லா நிலைகளிலும் தாக்குகின்றது. நோயின் அறிகுறிகளை இலை கதிரின் கழுத்துப்பகுதி மற்றும் தானிய விதைகளின் மீதும் காணலாம். நோயின் ஆரம்ப நிலையில் சிறிய ஊதா கலந்த பச்சை நிறத்தில் புள்ளிகள் தோன்றி, பின்பு நீள வடிவத்தில் சாம்பல் நிற மையத்தையும், பழுப்பு நிற ஓரத்தையும் கொண்ட பெரிய புள்ளிகளாக மாறும்.

நோய் வளர்ச்சி அடைந்த நிலையில் இலைப் புள்ளிகள் ஒன்று சேருவதால் இலைகள் காய்ந்து இதே மாதிரியான புள்ளிகள் இலை உறையின் மீதும் தோன்றும். மேலும் கடுமையாக தாக்கப்பட்ட நாற்றங்கால், நெல் வயல், எரிந்து போனது போல் தோற்றமளிக்கும். நோயால் பாதிக்கப்பட்ட கதிரின் கழுத்துப் பகுதி உடைந்துவிடும் ஆகியவற்றை இந்நோயின் அறிகுறிகளாகும்.

இந்நோயை கட்டுப்படுத்த களைகளை கட்டுப்படுத்தி அழித்தல் வேண்டும் மற்றும் தழைச்சத்தை பலமுறை பகிர்ந்து இடுதல் அவசியமாகும். மேலும் நாற்று நட்ட 30 நாட்கள் கழித்து ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ சூடோமோனாஸ் பாக்டீரியா கலவையை 20 கிலோ நன்கு மக்கிய சாண எரு கலந்து இட வேண்டும். சூடோமொனாஸ் பாக்டீரியாவை 10 கிராம் ஒரு கிலோ விதைக்கு என்ற அளவில் கலந்து விதைநேர்த்தி செய்வதன் மூலம் நாற்றங்காலில் தோன்றும் நோயைக்கட்டுப்படுத்தலாம்.

வளர்ந்த பயிர்களில் நோய் தோன்றும் போது கார்பன்டசிம் 50 டபிள்யு 200 கிராம் ஏக்கர் அல்லது ட்ரைசைக்லோசோல் 75 டபிள்யு 200 கிராம்

ஏக்கர் மற்றும் 200 லிட்டர் தண்ணீரில் ஒட்டும் திரவம் கலந்து தெளித்து இடுவதன் மூலம் குலை நோயை கட்டுப்படுத்தி மகசூல் இழப்பை தடுக்க முடியும் எனத் ெதரிவித்துள்ளார்.

**ஏக்கருக்கு ரூ.1 லட்சம் வரை வருவாய் ஈட்டலாம்**

தஞ்சை, : தஞ்சை அருகே மெலட்டூரில் வேளாண்மைத்துறை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் சார்பில் குறுவை சாகுபடி தொகுப்பு திட்டம் வழங்குதல், பயறுவகை பயிர் வயல் விழா நேற்று நடந்தது. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் ராமசாமி ேபசுகையில், தமிழகத்தில் 72 ஆயிரம் டன்களாக இருந்த உணவு உற்பத்தி 4 ஆண்டுகளுக்கு முன்பு 100 லட்சம் டன்களாக அதிகரித்தது. பின்னர் இது 108 லட்சம் டன்களாகவும், 112 லட்சம் டன்களாகவும், 129 லட்சம் டன்களாகவும் உயர்ந்தது. விவசாயிகளின் உழைப்பும், தொழில்நுட்ப பயன்பாடுமே இந்த இலக்கை எட்ட காரணம் என்றார்.

இதைதொடர்ந்து நிருபர்களுக்கு அளித்த பேட்டி: குறுவை சாகுபடி செய்ய முடியாத இடத்தில் மழைநீர், இருக்கும் தண்ணீர் ஆகியவற்றை பயன்படுத்தி 60 நாள் பயிரான உளுந்து சாகுபடி செய்தால் ஏக்கருக்கு ரூ.1 லட்சம் வரை வருவாய் ஈட்ட முடியும். பயறு வகையில் விதை, விதை நேர்த்திக்கு அரசு உதவி செய்கிறது. மேலும் உளுந்து கிலோவுக்கு ரூ.120 என விவசாயிகளே தேடி வந்து வழங்குகின்றனர் என்றார்.

**அரசின் வேளாண் திட்டங்கள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துங்கள் அதிகாரிகளுக்கு அறிவுரை**

திருவாரூர், : திருவாரூர் கலெக்டர் அலுவலகத்தில் வேளாண்துறை, வருவாய்த்துறை, பொதுப்பணித்துறை, கூட்டுறவுத்துறை மற்றும் பொதுவிநியோக திட்டம் உட்பட அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம் நடந்தது. இதில் அமைச்சர் காமராஜ் பேசுகையில், டெல்டா மாவட்டங்களுக்குகுறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்துக்காக ரூ.54.65 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. குறுவை சிறப்பு திட்டத்தின் மூலம் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் பயன்பெறும் வகையில் அரசின் திட்டங்களை மக்களிடம்

வேளாண்துறை அலுவலர்கள் கொண்டு செல்ல வேண்டும்.

மாவட்டத்தில் உள்ள அனைத்துத்துறை உயர் அலுவலர்களும் தங்களது துறைக்கு என்ன தேவை என்பதை கலெக்டரிடம் மனு மூலம் அளித்தால் முதல்வரிடம் தெரிவித்து நிறைவேற்றி தரப்படும் என்றார். கலெக்டர் மதிவாணன், டிஆர்ஓ மோகன்ராஜ், நுகர்பொருள் வாணிபகழக முதுநிலை மண்டல மேலாளர் அழகிரிசாமி, வேளாண்மை இணை இயக்குனர் மயில்வாகனன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் ரவிசந்திரன், ஆர்டிஓக்கள் திருவாரூர் முத்துமீனாட்சி, மன்னார்குடி செல்வசுரபி மற்றும் பலர் பங்கேற்றனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

## பெருஞ்சாணி அணையில் இருந்து 427 கன அடி தண்ணீர் திறப்பு



குமரி மாவட்டத்தில் இம்மாத தொடக்கத்தில் தொடர்ந்து பெய்து வந்த சாரல் மழை தற்போது ஓய்ந்துள்ளது. இருப்பினும் அணைகளுக்கு தண்ணீர் வரத்து இருந்து வருகிறது. நேற்றைய நிலவரப்படி பேச்சிப்பாறை அணைக்கு வினாடிக்கு 30 கன அடி தண்ணீரும், பெருஞ்சாணி அணைக்கு 102 கன அடி தண்ணீரும், மாம்பழத்துறையாறு அணைக்கு 3 கன அடி தண்ணீரும் வந்தது.

பெருஞ்சாணி அணையில் இருந்து மட்டும் தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது. இந்த அணையில் இருந்து நேற்று முன்தினம் வரை 254 கன

அடி தண்ணீர் திறந்து விடப்பட்டிருந்தது. நேற்று முதல் இந்த அணையில் இருந்து கூடுதலாக தண்ணீர் திறந்து விடப்பட்டது. 254 கன அடியில் இருந்து 427 கன அடியாக உயர்த்தப்பட்டு, திறந்து விடப்படுகிறது. மாம்பழத்துறையாறு நிறைந்துள்ளதால் அந்த அணைக்கு வரும் 3 கன அடி தண்ணீர் அப்படியே வெளியேற்றப்படுகிறது.

**மக்காச்சோளம் இறக்குமதி செய்து பற்றாக்குறையை போக்க வேண்டும் தமிழ்நாடு முட்டை கோழிப்பண்ணையாளர்கள் சம்மேளனம் கோரிக்கை**



வெளிநாடுகளில் இருந்து வரி இல்லாமல் மக்காச்சோளம் இறக்குமதி செய்து பற்றாக்குறையை போக்க அரசு முன்வர வேண்டும் என தமிழ்நாடு முட்டை கோழிப்பண்ணையாளர்கள் சம்மேளனம் கோரிக்கை விடுத்து உள்ளது.

**<u>கோரிக்கை மனு</u>**

தமிழ்நாடு முட்டை கோழிப்பண்ணையாளர்கள் சம்மேளனத்தின் துணைத்தலைவர் வாங்கிலி சுப்பிரமணியம் மற்றும் நிர்வாகிகள் இந்திய காயர்போடு தலைவர் ராதாகிருஷ்ணனை சந்தித்து கோரிக்கை மனு

ஒன்றை கொடுத்தனர். அந்த மனுவில் அவர்கள் கூறியிருப்பதாவது:–

இந்தியாவில் விவசாயம் சார்ந்த தொழிலான முட்டை மற்றும் கறிக்கோழிகள் வளர்க்கும் தொழில் மிகவும் வேகமாக வளர்ந்து வருகிறது. சுமார் 30 லட்சம் மக்கள் இத்தொழிலில் நேரடியாக ஈடுபட்டு வருகின்றனர். கோழித்தீவனத்தில் மிகமுக்கிய மூலப்பொருளான மக்காச்சோளம் 50 சதவீதம் தீவனம் தயாரிக்க தேவைப்படுகிறது. அந்தவகையில் நாள்ஒன்றுக்கு 25 ஆயிரம் டன் மக்காச்சோளம் நாடுமுழுவதும் தேவைப்படுகிறது.

**<u>மக்காச்சோளம் விலை உயர்வு</u>**

ஆனால் தற்போது நிலவிவரும் மக்காச்சோளத்தின் பற்றாக்குறையால், விலை மிகவும் கடுமையாக உயர்ந்து வருகிறது. கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து இதுவரை கிலோ ஒன்றுக்கு ரூ.14 முதல் ரூ.19 வரை உயர்ந்து உள்ளது.

பண்ணையாளர்கள் இந்த விலை உயர்வை சந்திக்க முடியாமல் சுமார் 5 சதவீத பண்ணைகளை மூடிவிட்டார்கள். எங்களது கணிப்பின் படி பார்த்தால் 3 மாதத்திற்குள் நாட்டில் உள்ள இருப்பு மக்காச்சோளம் தீர்ந்துவிடும். எனவே மக்காச்சோளம் இறக்குமதி செய்வது என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

**<u>வரி இல்லாமல் இறக்குமதி</u>**

இந்த சூழ்நிலையில் மத்தியஅரசு, துறை சார்ந்த மந்திரிகளையும், அதிகாரிகளையும் கலந்து ஆலோசித்து வெளிநாடுகளில் இருந்து மக்காச்சோளத்தை வரிஇல்லாமல் இறக்குமதி செய்து, பற்றாக்குறையை போக்க முன்வரவேண்டும். மக்காச்சோளம் பதுக்கலையும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கடந்த 2004–ம் ஆண்டு மத்தியஅரசு கோழிப்பண்ணை தீவன பற்றாக்குறை ஏற்பட்டபோது, அரசு சேமிப்பு கிடங்கில் இருந்து மனிதர்களின் உணவிற்கு பயன்படாத உணவு தானியங்களை பண்ணையாளர்களுக்கு மலிவு விலையில் கொடுத்து உதவியது. அதுபோலவே தற்போதும் கோதுமை, அரிசி மற்றும் தானிய வகைகளை கொடுத்து உதவவேண்டும்.

இந்த கோரிக்கைகளை அரசின் கவனத்திற்கு கொண்டுசென்று, உடனடியாக மக்காச்சோளத்தின் இறக்குமதி வரியை நீக்கி, இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்து கொடுத்தால் தான், கோழிப்பண்ணை தொழிலை காப்பாற்ற முடியும். இவ்வாறு அந்த மனுவில் கூறி இருந்தனர்.

## குன்னூர் ஏல மையத்தில் ரூ.9 கோடியே 98 லட்சத்துக்கு தேயிலைத்தூள் ஏலம்



குன்னூர்,

குன்னூர் ஏல மையத்தில் ரூ.9 கோடியே 98 லட்சத்துக்கு தேயிலைத்தூள் ஏலம் போனது.

<u>குன்னூர் ஏல மையம்</u>

குன்னூர் தேயிலை வர்த்தகர் அமைப்பின் சார்பில் வாரந்தோறும் வியாழன், வெள்ளி ஆகிய 2 நாட்கள் தேயிலை ஏலம் நடத்தப்படுகிறது. இந்த ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் கலந்து கொண்டு தேயிலைத்தூளை ஏலம் எடுத்து வருகின்றனர்.

விற்பனை எண் 25–க்கான ஏலம் கடந்த 23, 24 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. மொத்தம் 11 லட்சத்து 21 ஆயிரம் கிலோ தேயிலைத்தூள் ஏலத்துக்கு வந்தது. இதில், 7 லட்சத்து 18 ஆயிரம் கிலோ இலை ரகமாகவும், 4 லட்சத்து 3 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது.

<u>92 சதவீதம் விற்பனை</u>

இந்த ஏலத்தில் 92 சதவீத தேயிலைத்தூள் விற்பனையானது. விற்பனையான அனைத்து தேயிலைத்தூள்களும் கிலோவுக்கு 1 ரூபாய் விலை வீழ்ச்சி ஏற்பட்டது. விற்பனையான தேயிலைத்தூளின் மொத்த மதிப்பு ரூ.9 கோடியே 98 லட்சம் ஆகும்.

சி.டி.சி. தேயிலைத்தூளின் அதிகபட்ச விலையாக கிலோ ஒன்றுக்கு 217 ரூபாயாக இருந்தது. ஆர்தோடக்ஸ் தேயிலைத்தூள் கிலோவுக்கு 261 ரூபாய் என அதிகபட்ச விலையாக ஏலம் சென்றது. சராசரி விலையாக இலை ரக தேயிலைத்தூளின் சாதாரண வகை கிலோ ஒன்றுக்கு 84 ரூபாயில் இருந்து 86 ரூபாய் வரையிலும், முதல் ரக தேயிலைத்தூள் கிலோவுக்கு 100 ரூபாயில் இருந்து 140 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.

<u>டஸ்ட் ரக தேயிலைத்தூள்</u>

டஸ்ட் ரக தேயிலைத்தூளின் சாதாரண வகை கிலோவுக்கு 93 ரூபாயில் இருந்து 95 ரூபாய் வரையிலும், முதல் ரக தேயிலைத்தூள் கிலோவுக்கு 110 ரூபாயில் இருந்து 160 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.

விற்பனை எண் 26–க்கான ஏலம் வருகிற 30, 1 ஆகிய தேதிகளில் நடக்கிறது. ஏலத்திற்கு மொத்தம் 13 லட்சத்து 13 ஆயிரம் கிலோ தேயிலைத்தூள் வருகிறது.

**தேயிலை தோட்டங்களில் கத்திரிக்கோல் மூலம் பச்சை தேயிலையை பறிக்கலாம் தேயிலை வாரியம் அறிவிப்பு**



கூடலூர்,

தேயிலை தோட்டங்களில் கத்திரிக்கோல் மூலம் பச்சை தேயிலையை பறிக்கலாம் என தேயிலை வாரியம் அறிவித்து உள்ளது.

<u>தேயிலை விவசாயம்</u>

நீலகிரி மாவட்டம் மலை மாவட்டம் என்பதால் தேயிலை மற்றும் காய்கறிகள் அதிகளவில் பயிரிடப்படுகிறது. இங்கு விளைவிக்கப்படும் காய்கறிகளுக்கு நல்ல வரவேற்பு உள்ளதால் தமிழகம் மட்டுமின்றி கேரளா, ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட வெளிமாநிலங்களிலும் அதிகளவில் விற்பனை செய்யப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் சுமார் 56 ஆயிரம் ஹெக்டர் பரப்பளவில் தேயிலை செடிகளும், 2 ஆயிரம் ஹெக்டர் பரப்பளவில் காபி செடிகளும், 7 ஆயிரம் ஹெக்டர் பரப்பளவில் காய்கறி செடிகளும், 2 ஆயிரம் ஹெக்டர் பரப்பளவில் வாசனை திரவியங்களும் பயிரிடப்பட்டு வருகின்றன.

நீலகிரி மாவட்டத்தில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறு விவசாயிகள் தேயிலை விவசாயத்தில் ஈடுபட்டு வருவதாக புள்ளிவிவரம் கூறுகிறது.

மேலும் இதனை நம்பி பல ஆயிரம் தொழிலாளர்கள் உள்ளனர். இதனால் மாவட்டத்தின் பொருளாதாரத்தையும், மக்களின் வாழ்வாதாரத்தையும் உயர்த்தும் முக்கிய காரணியாக தேயிலை விவசாயம் உள்ளது.

கத்திரிக்கோல் பயன்படுத்தலாம்

கூடலூர் பகுதியில் கோடை காலத்தில் ஏற்பட்ட வறட்சியின் காரணமாக தேயிலை தோட்டங்களில் மகசூல் வெகுவாக குறைந்து இருந்தது. தற்போது தென்மேற்கு பருவமழை பெய்ய தொடங்கி உள்ளதால் தேயிலை மகசூல் அதிகரித்து வருகிறது. தேயிலை தோட்டத்தில் பணியாற்றும் தோட்ட தொழிலாளர்கள் பரவலாக கத்தியை கொண்டு பச்சை தேயிலையை பறித்து வருகின்றனர். இச்செயலால் தேயிலையின் தரம் மிகவும் பாதிக்கப்பட்டு வந்தது. எனவே தேயிலை தோட்டங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள் கத்திரிக்கோல் மூலம் பச்சை தேயிலையை பறிக்கலாம் என தேயிலை வாரியம் அறிவித்து உள்ளது. இதுகுறித்து கூடலூர் தேயிலை வாரிய உதவி இயக்குனர் சி.கே.ரமேஷ் வெளியிட்டு உள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:–

நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பச்சை தேயிலைக்கு சர்வதேச புகழ் இருப்பதால் உள்ளூர் மட்டுமின்றி வெளிநாடுகளுக்கும் தேயிலைத்தூள் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்த நிலையில் தொழிலாளர்கள் பற்றாக்குறை காரணமாக கத்தி மூலம் பச்சை தேயிலையை தொழிலாளர்கள் பறித்து வந்தனர். இதனால் தேயிலை செடியின் தரம் குறைந்து வந்தது. எனவே கத்தி மூலம் பச்சை தேயிலையை பறிக்கக்கூடாது என்று தேயிலை வாரியம் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சியை ஏற்படுத்தி வந்தது.

அதிக லாபம் கிடைக்கும்

கேரள மாநிலம் வயநாடு மாவட்டம், நீலகிரி மாவட்டம் கூடலூர், பந்தலூர் தாலுகா பகுதியில் ஒருசில தோட்டங்களில் கத்திக்கு பதிலாக கத்திரிக்கோல் மூலம் பச்சை தேயிலை பறிக்கப்படுகிறது. அதிக மகசூல் காலங்களில் தேயிலை தோட்டங்களில் கத்திரிக்கோல் மூலம் பச்சை தேயிலையை பறித்தால் அதிக லாபம் கிடைக்கும். எனவே இம்முறையை அனைத்து விவசாயிகளும், தொழிலாளர்களும் பின்பற்ற வேண்டும். சந்தையில் 800 கிராம் எடை கொண்ட கத்திரிக்கோலை வாங்கி வலதுபுறம் அசைக்காமல் இடதுகைப்பிடி பிளேடை மட்ட வாட்டத்தில் அசைத்து பச்சை தேயிலையை வெட்டுவதற்கு அசைக்க வேண்டும்.

இதனால் அதிக மகசூல் காலங்களில் குறைந்த நேரத்தில் பச்சை தேயிலையை அதிகம் பறிக்க முடியும். மேலும் தோட்ட தொழிலாளர்கள் பற்றாக்குறையை போக்கவும் முடியும். கத்திரிக்கோல் பயன்படுத்தி பச்சை தேயிலை பறிப்பதால் தோட்டத்தை பராமரிக்க முடியும். மேலும் கொப்புள நோய் வராமலும் தடுக்கலாம். இதேபோல் கத்திரிக்கோல் உபயோகப்படுத்தி பச்சை தேயிலை பறிப்பதால் தரமான இலையும் அதற்கு நல்ல விலையும் கிடைக்கும். மேலும் தரமான தேயிலைத்தூளை உற்பத்தி செய்ய முடியும். எனவே விவசாயிகள், தொழிலாளர்கள் இம்முறையை பின்பற்ற வேண்டும் என கேட்டு கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.